NOVEMBER/DECEMBER 2025

FTA62/CTA62 — இலக்கணம் - 6 (புறம்)

Time : Three hours Maximum : 75 marks



பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. பாதீடு என்றால் என்ன?
2. பிள்ளைத் தெளிவு - வரையறுக்க.
3. மழபுல வஞ்சி என்றால் என்ன?
4. தழிஞ்சி என்றால் என்ன?
5. உழிஞைத் திணை என்றால் என்ன?
6. அழிபடைதாங்கல் பற்றி எழுதுக.
7. தும்பை அரவம் என்றால் என்ன?
8. முரச வாகை - வரையறுக்க.
9. இயன்மொழி வாழ்த்து என்றால் என்ன?
10. செவியறிவுறூஉ என்றால் என்ன?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) விரிச்சி கேட்டல் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆநிரைகள் மீட்டல் பற்றி விளக்குக.

12. (அ) வஞ்சித்திணை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) நிலையாமை உணர்த்தும் திணை குறித்து எடுத்துரைக்க.

13. (அ) உழிஞைத் திணை பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மகள் மறுத்து மொழிதல் பற்றி விளக்குக.

14. (அ) தும்பைத்திணையின் துறைகள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தேர்க்குரவையின் பாகுபாடுகளைப் பட்டியலிடுக.

15. (அ) துயில் சார்ந்து பாடாண் படலத்தில் காணப்பெறும் துறைகள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) மங்கலம் சார்ந்து அமையும் பாடாண் படலத் துறைகளைத் தொகுத்துரைக்க.

Shanmuga Industries Arts & Science College T.V.Malai

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

16. ஆநிரைகளைக் கவரச் செல்லும் துறைகள் பற்றி விளக்குக.

17. வஞ்சிப் படலத் துறைகள் பற்றி விரித்துரைக்க.

18. நொச்சிப் படலம் பற்றி எடுத்துரைக்க.

19. வாகைத்திணையின் துறைகள் பற்றி எடுத்துரைக்க.

20. பாடாண் படலத்துறைகளைத் தொகுத்துரைக்க.

———————